***கவனிக்க.-*** *10.03.2017 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* III *பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2011 - 2017 මාර්තු මස 17 වැනි සිකුරාදා - 2017.03.17**

*2011 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *476* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *480* |

***கவனிக்க.-*** (i) *அகில இலங்கை வரலாற்று ரீதியான தேவாலய அலுவலர்களின் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

(ii) *குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலம் 2017, மாச்சு மாதம் 03 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி.வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2017, ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, மாச்சு மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*''ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.''*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :.*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஒய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஒய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஒய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஒய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஒய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஒய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஒய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஒய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணினி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## துறைமுகங்கள், கப்பற்துறை அமைச்சு

வணிகக் கப்பற்துறை செயலகம்

### ஆட்சேர்ப்புச் செய்தல்

துறைமுகங்கள், கப்பற்துறை அமைச்சின் வணிகக் கப்பற்துறை செயலகத்தில் பின்வரும் பதவிகளுக்கு தகைமைபெற்ற இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

| பதவிப் பெயர் | ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தரம் | பதவி எண்ணிக்கை |
|---|---|---|
| உதவி அரச கப்பல்கள் அளவையாளர் (பொறியியல்) | தரம் II | 1 |
| உதவி அரச கப்பல்கள் அளவையாளர் (கப்பல் தளம்) | தரம் II | 1 |

1. **தகைமைகளும் அனுபவமும் :**

(i) ***கல்வித் தகைமைகள், அனுபவம் உட்பட பிற தகைமைகள் :***

| பதவி | கல்வித் தகைமைகள் | தொழிற் தகைமைகள் | அனுபவம் |
|---|---|---|---|
| உதவி அரச கப்பல்கள் அளவையாளர் (பொறியியல்) | சமுத்திர இயந்திர காவலர் பொறுப்பு உத்தியோகத்தர் (வரையறுக்கப்படாத) சான்றிதழ் பெற்றிருத்தல் | ஏற்புடையதாகாது | 3,000 கிலோ வோட்டுக்கு அதிகமான ஆற்றலுடைய பிரதான என்ஜின் ஒன்றைக் கொண்ட கடல் பிரயாணத்தில் ஈடுபடும் வணிக கப்பல் ஒன்றில் இயந்திர காவலராக ஆகக் குறைந்தது இரண்டு (02) வருடகால அனுபவம் இருத்தல் |
| உதவி அரச கப்பல்கள் அளவையாளர் (கப்பல் தளம்) | கப்பற் தள காவலர் பொறுப்பு உத்தியோகத்தர் (வரையறுக்கப்படாத) சான்றிதழ் பெற்றிருத்தல் | ஏற்புடையதாகாது | 3,000 கிலோ வோட்டுக்கு அதிகமான ஆற்றலுடைய பிரதான என்ஜின் ஒன்றைக் கொண்ட கடல் பிரயாணத்தில் ஈடுபடும் வணிக கப்பல் ஒன்றில் கப்பற் தள காவலாளராக ஆகக் குறைந்தது இரண்டு (2) வருடகால அனுபவம் இருத்தல் |

2. **உடற்தகுதி.**- விண்ணப்பதாரர்கள் ஒவ்வொருவரும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவை புரிவதற்கும் பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் ஆரோக்கியமும் சிறந்த மனநிலையும் கொண்டவராய் இருத்தல் வேண்டும்.

3. **பிற தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாய் இருத்தல் வேண்டும் ;
(ii) விண்ணப்பதாரர்கள் நற்பண்புடையவர்களாக இருத்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்றுக்கு பதவி ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான தகைமைகளை எல்லாவிதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். இவ்வாறு அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4. **வயதெல்லை.**- 21 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இந்த வயதெல்லை ஏற்புடையதாகாது.)

5. **சம்பள அளவுத்திட்டம்.**- ரூ. 34,605 - 10 x 660 - 11 x 755 - 15 x 930 - ரூபா 63,460.

6. **ஆட்சேர்ப்புத் திட்டம்.**- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் தகைமைகள் பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் புள்ளி நடைமுறைக்கு அமைவாக புள்ளிகள் வழங்கப்படும் :-

| | பரிசீலனை செய்து புள்ளி வழங்கப்படும் தலைப்புக்கள் | ஆகக்கூடிய புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| 1 | மேலதிக கல்வித் தகைமைகள் | 30 |
| 2 | தொழில் தகைமைகள் | 25 |
| 3 | மேலதிக அனுபவம் (ஆட்சேர்ப்பின்போது பரிசீலனை செய்யப்படும் அனுபவத்திற்கு மேலதிகமாக) | 20 |
| 4 | ஆங்கில மொழித் தேர்ச்சி | 10 |
| 5 | கணினி அறிவு | 10 |
| 6 | நேர்முகப் பரீட்சை | 05 |
| | | 100 |

இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

7. **விண்ணப்பிக்கும் முறை :**

(i) இந்த வர்த்தமானி அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2017.04.20 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "வணிகக் கப்பற் துறை பணிப்பாளர் அதிபதி, வணிகக் கப்பற்துறை செயலகம், இலக்கம் 43-89, பிறிஸ்ரல் கட்டடம், 1 ஆம் மாடி, யோர்க் வீதி, கொழும்பு 01" என்னும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் உரிய பதவி குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(ii) ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் அவர்களுடைய விண்ணப்பங்களை இயைபுள்ள திணைக்களத் தலைவர்களின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை அல்லது வித்தியாசம் ஏற்படின் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

வணிகக் கப்பற்துறை பணிப்பாளர் அதிபதி,
வணிகக் கப்பற்துறை செயலகம்.

துறைமுகங்கள், கப்பற்துறை அமைச்சு,
1 ஆம் மாடி, பிறிஸ்ரல் கட்டிடம்,
இல. 43-89, யோர்க் வீதி,
கொழும்பு 1,
2017, மாச்சு 17.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வணிகக் கப்பற்துறை செயலகம்**

உதவி அரச கப்பல்கள் அளவையாளர் (பொறியியல்)/ (கப்பல் தளம்) பதவி

(அலுவலக உபயோகத்துக்கு)

1. விண்ணப்பதாராின் பெயர் :

(i) முதலெழுத்துக்கள் இறுதியாக வரும் விதத்தில் முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

(ii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. முகவரியும் தொலைபேசி இலக்கமும் :
(i) அலுவலக முகவரி :----.
தொலைபேசி இலக்கம் :----.

(ii) சொந்த முகவரி :----.
தொலைபேசி இலக்கம் :----.
செல்லிடத் தொலைபேசி இலக்கம் :----.

3. பிறந்த திகதி :

ஆண்டு :---- மாதம் :---- திகதி :----.

4. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்றுக்கான வயது-

வருடங்கள் :---- மாதங்கள் :---- நாட்கள் :----.

5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

6. பால் :----.

7. திருமணமானவரா/ திருமணமாகாதவரா/ விதவையா என்பது பற்றி : ----.

8. கல்வித் தகைமைகள் :

| தகைமைகள் | தகைமை பெற்ற வருடம் | பாட விதானம் | சித்தி | நிறுவனத்தின் பெயர் | பிற |
|---|---|---|---|---|---|
| | | | | | |

9. தொழில் தகைமைகள் :

| தகைமைகள் | தகைமை பெற்ற வருடம் | பாட விதானம் | சித்தி | நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

10. அனுபவம் தொடர்பான விபரங்கள் :

| சேவையாற்றிய நிறுவனம் | பதவி | இந்தப் பதவிக்குரிய பணிகள் சுருக்கமாக | சேவைக்காலம் |
|---|---|---|---|
| | | | |

11. கணினி தொடர்பிலான தேர்ச்சி :

(அ) பட்டம் :----.
(ஆ) டிப்ளோமா :----.
(இ) சான்றிதழ் பாடநெறி :----.

12. ஆங்கில மொழி தொடர்பிலான தேர்ச்சி :

(அ) பட்டம் :----.
(ஆ) டிப்ளோமா :----.
(இ) சான்றிதழ் பாடநெறி :----.

13. தாங்கள் ஏதேனும் குற்றமொன்று சம்பந்தமாக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ? :----.

என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டிருக்கும் தகவல்கள் உண்மையானவையெனவும் பிழையற்றவையெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது தகவல்கள் உண்மையற்றவையென அல்லது பிழையானவையென நியமனம் வழங்க முன்னர் தெரியவந்தால் எனது அபேட்சகத் தன்மை இல்லாதொழியும் எனவும் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் இந்தத் தவறு தெரியவந்தால் இதற்குரியதான நடவடிக்கைகளுக்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

14. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ................................ என்பவரை நான், தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் ................................. ஆந் திகதியன்று என் முன்னிலையில் அவருடைய கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

15. திணைக்கள/ நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :

(ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும்.)

இந்த அமைச்சில்/திணைக்களத்தில்/நிறுவனத்தில் கடமையாற்றும் திரு./திருமதி/செல்வி ......................................, தற்போது .................................... பதவியில் கடமையாற்றுகிறாரெனவும், அவருடைய வேலை மற்றும் நடத்தை திருப்திகரமானதெனவும், ஒழுக்காற்று நடவடிக்கை எதுவும் இல்லையெனவும் அதுபற்றி நடவடிக்கை எடுப்பதற்குக் கருதவில்லையெனவும் உறுதிப்படுத்துகின்றேன். அவர் இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
உத்தியோகபூர்வ இலச்சினையும்.

திகதி :----.

3-831

## நீதிச்சேவைகள் ஆணைக்குழு

*நிர்வாக மேன்முறையீடுகள் நியாய சபையின் தலைவர் பதவிக்கான வெற்றிடம்*

*நிர்வாக மேன்முறையீடுகள் நியாய சபையின் தலைவர் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்காக விண்ணப்பங்களைக் கோருவதற்கு நீதிச்சேவைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. சகல விண்ணப்பப்படிவங்களும் 2017.04.17 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பதாக நீதிச்சேவைகள் ஆணைக்குழுச் செயலகத்திற்குக் கிடைக்கப்பெறல் வேண்டும்.*

*2.* **தகைமைகள்.**- *வழக்கறிஞர் தொழிலில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம்.*

*3.* **தலைவர் பதவிக்குரிய கொடுப்பனவுகள் கீழ்வருமாறு :**

*மாதாந்தக் கொடுப்பனவு - ரூ. 65,000*
*எரிபொருள் கொடுப்பனவு - ரூ. 26,325 (மாதாந்தம்)*

*ஜீ. எம். டபிள்யு. பி. ஜயதிலக்க,*
*செயலாளர் (பதில்),*
*நீதிச்சேவைகள் ஆணைக்குழு.*

*நீதிச்சேவைகள் ஆணைக்குழுச் செயலகம்,*
*கொழும்பு 12,*
*2017, மாச்சு 01.*

*3-612*

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் புகையிரத மேற்பார்வை முகாமைத்துவ சேவையின் தரங்களுக்கு மேற்பார்வை முகாமையாளர் (சமிக்கை மற்றும் தொலைத்தொடர்பு) III ஆம் தர பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - (வெளிவாரியான) 2017

*இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் புகையிரத மேற்பார்வை முகாமைத்துவ சேவையின் மேற்பார்வை முகாமையாளர் (சமிக்கை மற்றும் தொலைத்தொடர்பு) III ஆம் தர பதவியில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2017.04.17 ஆந் திகதியன்று 18 வயதுக்கு கூடிய மற்றும் 30 வயதுக்குக் குறைந்த இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*2. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 2017.04.17 ஆகும். சகல விண்ணப்பப்படிவங்களும் அத்தினத்திற்கு முன்பு ''பிரதான பொறியியலாளர் (சமிக்கை மற்றும் தொலைத்தொடர்பு), சமிக்கை மற்றும் தொலைத்தொடர்பு உப திணைக்களம், இல. 417, டாக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, கொழும்பு 9'' எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். எந்த விண்ணப்பப்பத்திரமாவது தனிப்பட்ட பெயருக்கோ கையில் கொண்டு வந்து பாரம் கொடுத்தலோ கூடாது. பூரணமற்ற, முறையற்ற, தேவையான தராதரங்களைக் கொண்டிராத, முறைப்படி பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத மற்றும் தாமதமாகிக் கிடைக்கும் விண்ணப்பப்பத்திரங்கள் எவ்வறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ளவர்கள் தங்களது விண்ணப்பப்பத்திரங்களைக் குறிப்பிட்ட தினத்திற்கு முன்பு தமது திணைக்களப் பிரதானியினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும். இப்பதவிக்காக வேண்டி தொழில் பரிசோதனை மாத்திரம் நடாத்தப்படுவதுடன் எழுத்து மூலம் பரீட்சை நடத்தப்பட மாட்டாது.*

*3.* **பதவியின், கடமையின் தன்மை.**- *மேற்பார்வை முகாமையாளர் (சமிக்கை மற்றும் தொலைத்தொடர்பு).- புகையிரத போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் புகையிரத சமிக்கை மற்றும் தொலைத்தொடர்பு முறையைப் புதிதாக நிர்மாணித்தல், பழுதுபார்த்தல், பராமரித்தல் மற்றும் பேணுகையின்போது மேற்பார்வை முகாமையாளரின் பொறுப்புக்களை மேற்கொள்ளல்.*

4. **சம்பள அளவுத்திட்டம்** :

(i) ரூபா 34,130 - 5 x 495-5 x 575 - 10 x 720 - 10 x 745 - ரூபா 54,130 ஆகும்.

(ii) இதற்கு மேலதிகமாக அரச ஊழியர்களுக்கு வழங்கப் படும் ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

(iii) சுகவீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப் படுகின்ற சந்தர்ப்பத்தில் 'அக்ரஹார' காப்புறுதித் திட்டத்தின் கீழ் செலவிடப்பட்ட தொகையை மீளப்பெற்றுக்கொள்ள முடியுமாகும்.

(iv) சேவையின் தேவையின் அடிப்படையில் உத்தியோக பூர்வ விடுதி பெறுவதற்கும் உரித்துள்ளது.

5. (அ) **கல்வித் தகைமைகள்** :

(i) சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றுமோர் பாடம் உட்பட திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (6) பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந் திருத்தல் ;

அத்துடன்

(ii) பிரயோக கணிதம், தூய கணிதம், பௌதிக விஞ்ஞானம், இணைந்த கணிதம் எனும் பாடங்களில் இரண்டு பாடங்கள் உட்பட விஞ்ஞான/ கணித பாடங்களுக்குட்பட்ட மூன்று (03) பாடங்களில் க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) **தொழிற் தகைமைகள்**.- மேலுள்ள (அ) (i) மற்றும் (ii) இன் அடிப்படைக் கல்வித் தராதரத்துடன் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தொழில் தராதரம் ஒன்றை விண்ணப்பதாரி பெற்றிருத்தல் வேண்டும் :

(i) மொறட்டுவை பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா ;

அல்லது

(ii) தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் பொறியியலாளர் விஞ்ஞான தேசிய டிப்ளோமா ;

அல்லது

(iii) கல்வி, உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய பொறியியலாளர் டிப்ளோமா ;

அல்லது

(iv) இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப் படும் தொழில்நுட்ப டிப்ளோமா ;

(v) மூன்றாம் நிலைத் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில் தராதரம் (NVQ) ஆறு (06) மட்டத்திலான பதவிக்குரிய பாடநெறி.

(மின்னியல் மற்றும் இலக்ட்ரோனிக் விடயத்தின்கீழ் குறித்த தராதரத்தைப் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.)

(இ) **வேறு தகைமைகள்** :

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரி சிறந்த குணநலம் உடையவராக இருத்தல் வேண்டும் ;

(iii) ஆண் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே விண்ணப் பிக்க முடியும்.

**குறிப்பு**.- விண்ணப்பதாரி இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட் டுள்ள விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று சகல தராதரங்களையும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

6. **ஆட்சேர்ப்பு செய்யும் முறை**.- மேலுள்ள (05) இல் குறிப்பிடப்பட்டுள்ள தராதரங்களைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு தொழில் பரிசோதனை நடாத்திப் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் திறமையின் வரிசைப்படி ஆட்சேர்ப்புச் செய்யப்படும். விண்ணப்பப்படிவம் கோரப்படும் சந்தர்ப்பத்தில் நிலவிய வெற்றிடங்கள் மாத்திரம் நிரப்பப்படுவதுடன் காத்திருப்போர் இடாப்பில் வைத்து ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட மாட்டாது.

7. **தேர்ந்தெடுக்கும் முறை**.- தொழில் பரிசோதனையில் 50% புள்ளிகளை அல்லது அதற்குக் கூடுதலான புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகள் பரீட்சையில் சித்தியடைந்ததாகக் கருதப்படுவார்கள். புள்ளிகள் பெற்றுக்கொண்ட வரிசையின்படி வெற்றிட தொகைக்குச் சமமான தொகை அடிப்படைத் தராதரங்களைப் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரிகள் மத்தியில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

(1) **புள்ளிகள் வழங்கப்படும் விதம் - முழுப்புள்ளி 100 ஆகும்**. தொழில் பரிசோதனை இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது.

(i) நேர்முகப் பரீட்சை.- கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள விடய உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்டு விண்ணப்பதாரியின் அறிவும் மற்றும் சமிக்கை மற்றும் தொலைத்தொடர்பு உப திணைக்களத்தின் செயற்பாடுகள் சம்பந்தமான அறிவும் விருப்பத்தையும் மற்றும் அரச சேவையில் தங்கியிருப்பதற்குக் காட்டும் விருப்பமும் பரிசீலிக்கப்படும். (வழங்கப்படும் புள்ளிகளின் தொகை 40 ஆகும்.)

(அ) மின் பொறியியல் விடயம் (Electrical Engineering).- தனி மற்றும் மும்முனை மின் (Single Phase and Three Phase) சம்பந்தமான அடிப்படை அறிவு, மின் உற்பத்தி, எதிர்மறை மின் அலை, நேரடி மின் அலை (Alterntung Current - direct Current) ஆக மாற்றும் மின் உபகரணங்கள் மற்றும் மின்சார மோட்டர் பற்றிய கோட்பாடுகள் Transformer மற்றும் நேரடி மின், நேரடி மின் சேர்க்கிட்களின் குளறுபாடுகளைக் கண்டறியும் அறிவு.

(ஆ) மின் பொறியியல் விடயம் (Electronic Engineering).- மின் பொறியியல் உதிரிப்பாகங்கள் (Diode Transistor SCR) மற்றும் பல்வேறு வகையினைச் சார்ந்த Amplifire சம்பந்தமான அறிவு.

டிஜிட்டல் மின் பொறியியல் உதிரிப்பாகங்கள் (Digital Electronic), (Loguc Gates Digital IC) சம்பந்தமான அறிவு.

டிஜிட்டல் மின்னியல் சேர்க்கிட்களின் குளறுபாடுகளைக் கண்டறிதல் மற்றும் அச்சேர்க்கிட்களை திட்டமிடல் சம்பந்தமான அறிவு.

(இ) மின் தொடர்பாடல் பொறியியல் விடயம் (Electronic Communication Engineering).

வானொலி மின் அலை, வானொலி மின் அலை உற்பத்தி (Radio Transmission) மற்றும் வானொலி உபகரணங்கள் (Radio Transmitters and Receives) பற்றிய அறிவு.

கணினி கட்டமைப்பு (Computer Network) மற்றும் கணனி தொலைத்தொடர்பு (Computer Communication) கட்டமைப்பு, மென்பொருள் போன்றவை சம்பந்தமான அறிவு.

(2) **தொழில் பரிசோனை**.- மேற்குறிப்பிட்ட விடயங்கள் 3 ஐயும் அடிப்படையாகக் கொண்ட தொழில் பரிசோதனை மூன்றுக்கு விண்ணப்பதாரிகளை உட்படுத்தி அவ்விடயங்கள் சம்பந்தமாக தொழில் அறிவை மதிப்பீடு செய்தல் மேற்கொள்ளப்படும். இங்கு உபகரணங்களை இனங்காணல் மற்றும் குளறுபாடுகளைக் கண்டறிதலுக்கான உபகரணங்களைப் பயன்படுத்தல் சம்பந்தமான அறிவைப் பரீட்சித்துப் பார்த்தல் மேற்கொள்ளப்படும். (வழங்கப்படும் புள்ளிகள் 60 ஆகும்)

**8. விண்ணப்பப்பத்திரம் தயாரிப்பதற்கும் பூரணப்படுத்துவதற்குமான அறிவுறுத்தல் :**

(i) விண்ணப்பப்படிவத்தை ஏ4 (துட்டச்சு கடதாசி) அளவுள்ள கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படல் வேண்டும். (தமது கையெழுத்தினால் நிரப்பப்படுதல் வேண்டும்)

விண்ணப்பப்படிவத்தில்-

1 ஆம் பக்கத்தில் 1 இலிருந்து 8 வரையிலான விடயங்களும்
2 ஆம் பக்கத்தில் 9 இலிருந்து 12 வரையிலான விடயங்களும்
3 ஆம் பக்கத்தில் திணைக்கள/நிறுவன பிரதானியின் உறுதிப்படுத்துகையும் உள்ளடக்கப்படல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களும், பூரணமற்ற வகையில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் புகைப்படப் பிரதி ஒன்றை வைத்துக்கொள்ளல் உமக்கு பிரயோசனப்படக்கூடியதாகவிருக்கும். மேலும் பூரணப்படுத்தும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்புடையதா என்று விண்ணப்பதாரி உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் அவசியமாகும்.

(ii) குறிப்பிட்ட தொழில் பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணம் 500 ரூபாவாகும். இப்பரீட்சைக் கட்டணம் "மக்கள் வங்கி - நகர மத்திய கிளையின் புகையிரத பொது முகாமையாளரின் கணக்கு இலக்கம் 176-1001-290270313 இற்கு வரவிலிட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் கழன்றுவிடாதவாறு ஒட்டிவிடுதல் வேண்டும். இப்பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியை இணைத்து அனுப்பினால் அல்லது வேறு முறைகளில் கட்டணம் செலுத்தப்பட்டால் அது விண்ணப்பப்படிவத்தை நிராகரிப்பதற்கு காரணமாக அமையும். மேலும் பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியை தம்மிடம் வைத்துக்கொள்ளல் பிரயோசனமுடையதாக இருக்கும். தொழில் பரிசோதனைக்காக செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணம் கொண்டும்

திரும்ப செலுத்தப்பட மாட்டாது. தொழில் பரீட்சைக்கான கட்டணமாக முத்திரை அல்லது காசுக்கட்டளை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(iii) விண்ணபப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் புகையிரத மேற்பார்வை முகாமைத்துவ சேவையின் மேற்பார்வை முகாமையாளர் (சமிக்கை மற்றும் தொலைத்தொடர்பு) III ஆம் தரத்திற்கு சேர்த்துக்கொள்ளும் திறந்த ஆட்சேர்ப்பு - 2017" எனக் குறிப்பிடவும்.

(iv) *வெளி விண்ணப்பதாரிகளின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்*.- விண்ணபப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும். ஏதேனும் நிறுவனத்தில் உள்ளவர்கள் தமது விண்ணபப்பப்படிவத்தை தமது நிறுவன பிரதானியினூடாக அல்லது அவரது அதிகாரம்பெற்ற அலுவலர் ஊடாகவும் அனுப்பி வைத்தல் வேண்டும். அவ்வாறில்லாத விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவத்தை அரச பாடசாலையின் அதிபர், கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் ரூபா 2,40,360 ஆன வருடாந்த இணைச் சம்பளத்தை அல்லது அதற்கு கூடிய ஆரம்ப சம்பளத்தைப் பெறும் அரச அல்லது மாகாண அரச சேவையின் நிரந்தர பதவிநிலை தரத்தை உடைய உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(v) தற்போது அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர்களின் கையொப்பம் தமக்கு கிட்டிய சேவைப் பிரதானியினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். இவர்களின் விண்ணபப்பப்படிவம் கட்டாயமாக திணைக்கள பிரதானியினூடாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

(vi) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தராதரங்களைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்று கருத்திற்கொண்டு, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குள் அடங்கும் குறிப்பிட்ட தொழில் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டை ஒட்டி குறிப்பிட்ட தினம் அல்லது அத்தினத்திற்கு முன்பு விண்ணப்பப்படிவம் முன்வைத்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் தொழில் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியதுடன், பரீட்சையின் ஆரம்பத்திலேயே பரீட்சை மேற்பார்வையாளரிடம் பாரமளித்தல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலின்படி தராதரங்களைக் கொண்டுள்ளாராவென பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தராதரங்கள் இல்லை என தெரியவருமிடத்து அவ்விண்ணப்பதாரியின் பரீட்சை போட்டியிடுகை இரத்துச்செய்யப்படும்.

9. **சேவை நிபந்தனை**.- ஆட்சேர்ப்புச் செய்யப்படுவது புகையிரத மேற்பார்வை முகாமைத்துவ சேவையின் மேற்பார்வை முகாமையாளர் (சமிக்கை மற்றும் தொலைத் தொடர்பு) III ஆம் தரத்துக்காவதுடன் குறித்த சம்பள அளவுத் திட்டத்தில் ஆரம்ப சம்பளத்தில் வைத்து வழங்கப்படும்.

10. **சேவையில் ஈடுபடுத்தும் நிபந்தனை** :

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும். தற்போதே விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டுள்ளவர்கள் மேலும் அதற்காக பங்குப்பணம் செலுத்துதல் வேண்டும்.

(ii) பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 07/2007 இன் ஏற்பாடுகளின்படி அரச சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழி சம்பந்தமான அறிவை 5 வருடங்களுக்குள் பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறு பெறாதவர்களின் சம்பள ஏற்றம் சித்தியடையும் வரை வழங்கப்பட மாட்டாது.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் தாபன விதிக்கோவையினதும், நிதிப்பிரமாணத்தினதும் ஏற்பாடுகளுக்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள செயற்பாட்டுத் திட்ட நியதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கும் அடிக்கடி அரசாங்கத்தினால் விடுக்கப்படும் கட்டளைகளுக்கும், திணைக்கள உபதேசங்களுக்கும் கீழ்ப்பட்டு செயற்பட கடமைப்பட்டுள்ளீர்.

11. இவ்றிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏதேனும் விடயங்கள் சம்பந்தமாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் புகையிரதப் பொது முகாமையாளருக்கு உரியதாகும்.

12. இவ்வறிவித்தலில் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூல அறிவித்தல்களில் கருத்துகளுக்கிடையில் ஏதேனும் வித்தியாசம் அல்லது பொருந்தாத்தன்மை உள்ளதாயின் அவ்வாறான இடத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தல் சரியானதாகக் கருத்திற்கொள்ளப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பி. ஏ. பீ. ஆரியரத்ன,
புகையிரத பொது முகாமையாளர்.

(இதன்படி ஏ-4 கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்துவதற்கு முன்பு விண்ணப்பம் கோரல் அறிவித்தலை வாசித்து நன்றாக புரிந்துகொள்ளவும்.)

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்காக)

**இலங்கைப் புகையிரதத் திணைக்களம்**

புகையிரதத் திணைக்களத்தின் புகையிரத மேற்பார்வை முகாமைத்துவ சேவையின் மேற்பார்வை முகாமையாளர் (சமிக்கை மற்றும் தொலைத்தொடர்பு) - III ஆம் தர பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - (வெளிவாரியான) 2017

External Recruitment for The Post in Railway Supervidory Management Service (Signal & Telecommunication) Service Grade III - 2017

1. முதலெழுத்துக்கள் கடைசியில் வருமாறு முதலெழுத்துடன் பெயர் :–

 (i) சிங்களத்தில்/ தமிழில் :————.
 (ii) ஆங்கிலத்தில் :————.
 (உதா. : PERERA R. M. D. C. P. A.)

2. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் :–

 (i) சிங்களத்தில்/ தமிழில் :————.
 (ii) ஆங்கிலத்தில் :————.

3. நிரந்தர முகவரி :–

 (i) சிங்களத்தில்/ தமிழில் :————.
 (ii) ஆங்கிலத்தில் :————.

4. ஆண்/ பெண் தன்மை :—

 பெண் - 1
 ஆண் - 0
 (பொருத்தமான இலக்கத்தை கூட்டில் எழுதவும்)

5. தேசிய ஆள் ஆளடையாள அட்டை இலக்கம் :

6. இனத் தொகுதி :
 சிங்களவர்-1, இலங்கைத் தமிழர்-2, இந்தியத் தமிழர்-3, முஸ்லிம்-4, பறங்கியர்-5, மலாயர்-6
 (பொருத்தமான இலக்கத்தை கூட்டில் எழுதவும்)

7. வதிவிடம் :

 (i) கிராம அலுவலர் பிரிவு :————.
 அதன் இலக்கம் :————.
 (ii) பிரதேச செயலாளர் பிரிவு :————.
 (iii) மாவட்டம் :————.

8. (i) பிறந்த திகதி :

 ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

9. தொலைபேசி இலக்கம் :

10. 2017.04.17 ஆந் திகதியன்று வயது :–

 வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

11. கல்வித் தகைமை :

 (i) க. பொ. த. (சா. தரம்) :

 பரீட்சைச் சுட்டெண் :————, வருடம் :————.

| தொடர் இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |

 (ii) க. பொ. த. (உயர் தரம்) :
 பரீட்சைச் சுட்டெண் :————, வருடம் :————.

| தொடர் இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

 (iii) தொழில் தகைமை :----.

12. நீர் எப்போதாவது ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாக கருதப்பட்டுள்ளீரா ?

 ஆம் ☐ இல்லை ☐

 (ஏற்புடைய கூட்டில் x அடையாளம் இடுக)

13. விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்துகை :

 (அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப் பட்டுள்ள தகவல்கள் யாவும் நான் அறிந்த வரையில் உண்மையானதெனவும் சரியானதெனவும் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் ஏதாவது பகுதி பூரணப்படுத்தப்படாமல் அல்லது பிழையான முறையில் அல்லது/உடன் உண்மைக்குப் புறம்பான முறையில் பூரணப்படுத்தப்பட்டிருப்பின் எனது விண்ணப்பம் இரத்துச்செய்யப்படும் என்பதை நான் நன்கறிவேன். அதனால் ஏற்படும் கேட்டை நான் தனிப்பட்ட முறையில் ஏற்றுக்கொள்கின்றேன். பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்பு மேற்குறிப்பிட்ட விடயம் தெரியவருமிடத்து பதவிக்கான நியமனம் இரத்துச்செய்யப்படும் என்பதையும் நான் நன்றாக அறிவேன். அதனால் ஏதேனும் கேடுகள் ஏற்படின் அவற்றையும் நான் தனிப்பட்ட முறையில் ஏற்றுக்கொள்வேன்.

(ஆ) மேலுள்ள (அ) வில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானதென நான் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பிறகு தெரியவருமிடத்து பதவியிலிருந்து நீக்கப் படுவேன் என்பதையும் நான் அறிவேன். அதன் மூலம் ஏற்க நேரும் நஷ்டத்தையும் நான் தனிப்பட்ட முறையில் ஏற்றுக்கொள்வேன்.

(இ) ............................ ஆம் மக்கள் வங்கி ........... ................................ கிளையில் 500 ரூபாவைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

| |
|---|
| பற்றுச்சீட்டை கழன்றுவிடாதவாறு ஒட்டவும் (பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியை தம்மிடம் வைத்துக்கொள்ளவும்) |

(ஈ) இப்பரீட்சையின் நிபந்தனைகளை கடைப்பிடிக்க இணங்குகிறேன்.

(உ) மேலும் பரீட்சை நடாத்துதல் சம்பந்தமாக புகையிரத பொது முகாமையாளரினால் விடுக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு நான் கீழ்ப்படிவதாகவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

—————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :—————.

14. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பப்படிவத்தை முன்வைக்கும் திரு. .................................... அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் ..................... ஆந் திகதி மேலுள்ள கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன். மேலும் பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்.

—————,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :—————.
பதவி :—————.
முகவரி :—————.
திகதி :—————.
(தயவுசெய்து உத்தியோகபூர்வ இலச்சினையைப் பொறிக்கவும்.)

15. திணைக்கள/ நிறுவன பிரதானியின் சான்றிதழ் :

இவ்விண்ணப்பப்படிவத்தை முன்வைக்கும் திரு. ............ .................................. அவர்கள் ............................. திணைக்களத்தில்/ நிறுவனத்தில் .................... ஆந் திகதியிலிருந்து .......................... ஆந் திகதி வரை ........................ ஆக சேவை புரிகிறார். அவருக்கு எதிராக முற்றுப்பெறாத ஒழுக்காற்று நடவடிக்கை உள்ளது/ இல்லை. அவரின் வேலை, நடத்தை மற்றும் சேவைக்கு சமுகம் தரல் திருப்திகர மானதாகும்/ அதிருப்திகரமானதாகும். குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதுடன் அப்பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டுள்ளது. அவர் புகையிரதத் திணைக்களத்தின் புகையிரத மேற் பார்வை முகாமைத்துவ சேவையின் மேற்பார்வை முகாமையாளர் (சமிக்கை மற்றும் தொலைத் தொடர்பு) - III ஆம் தர பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படு மிடத்து இத்திணைக்களத்திலிருந்து/ நிறுவனத்திலிருந்து விடுவிக்கச் செய்ய முடியும்/ முடியாதென தெரிவித்துக் கொள்கிறேன்.

—————,
திணைக்கள/ நிறுவன பிரதானியின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் :—————.
பதவி :—————.
முகவரி :—————.
திகதி :—————.

(தயவுசெய்து உத்தியோகபூர்வ இலட்சினையைப் பொறிக்கவும்.)

3-547

---

## அரசாங்க சேவை ஆணைக்குழு

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு

## இலங்கை வெளிநாட்டு சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016 (2017)

இந்த அறிவித்தலின் 02 ஆம் பந்தியின் நியதிகளின் பிரகாரம் தகைமையுடைய பரீட்சார்த்திகளிடமிருந்து இலங்கை வெளிநாட்டு சேவையின் III ஆம் தரத்திற்கு (இதன் பின்னர் "சேவை" எனக் குறிப்பிடப்படும்) 25 வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **ஆட்சேர்ப்பு முறை:**

இந்த அறிவித்தலின் நியதிகளின் பிரகாரம் தகைமை யடைந்துள்ள பரீட்சார்த்திகள் எழுத்துப் பரீட்சை யொன்றுக்கும் தகவுத்திறனின் மதிப்பீட்டிற்கான நேர்முகப் பரீட்சையொன்றுக்கும் தோற்றுமாறு வேண்டப் படுகின்றனர். அவர்கள் எழுத்து மூலப் பரீட்சையிலும் நேர்முகப் பரீட்சையிலும் மொத்தமாகப் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தெரிவு செய்யப்படுவர்.

02. **வேண்டப்படும் தகைமைகள் :**

(i) ***கல்வி / தொழில்சார் தகைமைகள் :-***

* இலங்கையிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

* இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

* இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுப் பல்கலைக்கழகமொன்றில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும். (நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும்போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் இதுதொடர்பில் வழங்கப்பட்ட ஆவண நிருபணம் பரீட்சார்த்தியினால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.)

(ii) ***பௌதிகத் தகைமைகள்:***

சகல பரீட்சார்த்திகளும் இலங்கையில் அல்லது உலகத்தின் எப்பகுதியிலும் அப்பதவியின் கடமைகளை நிறைவேற்றக்கூடியவராகவும் பௌதிக ரீதியாகவும் உள ரீதியாகவும் தகுதியுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(iii) ***ஏனையவை:***

(அ) இலங்கைப் பிரசையாகவிருத்தல் வேண்டும். (இரட்டை நாட்டுப் பிரசாவுரிமை கொண்டவர்கள் இலங்கை வெளிநாட்டுச் சேவைக்கு தெரிவு செய்யப்படுமிடத்து அவர்கள் தங்களுடைய வெளிநாட்டு பிரசாவுரிமையை இரத்துச் செய்தல் வேண்டுமென்பதுடன் தங்களுடைய இச் சேவைக்காலப் பகுதியில் பிற எந்த நாட்டினதும் நாட்டுப் பிரசா உரிமையையும் பெற்றுக் கொள்ளலாகாது )

(ஆ) அதிசிறந்த ஒழுக்கமுடையவராகவிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்ப முடிவுத்திகதியளவில் இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கான சகல தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு** :

(i) எந்த மதப் பிரிவிலும் மதப்பணியில் அமர்த்தப்பட்டவர் இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கோ அல்லது தோற்றுவதற்கோ தகுதியுடையவர் அல்லர்.

(ii) மூன்றுக்கு மேற்பட்ட தடவைகளுக்கு மேல் இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எவரும் உரித்துடையவர் அல்லர்.

(iii) தேவையான சகல தகைமைகளும் இயைபுள்ள வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

03. **இச் சேவையின் நியதிகளும் நிபந்தனைகளும் :**

I. அரசாங்க சேவையிலுள்ள நியமனங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள பொது நியதிகளின் பிரகாரம் இச்சேவைக்கு தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் 06.12.2016 ஆம் ஆண்டின் இலங்கை வெளிநாட்டுச் சேவையின் பிரமாணக் குறிப்புகளிலும் அவற்றின் திருத்தங்களிலும் விதித்துரைக்கப்பட்டுள்ள நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைந்து நடப்பதற்கு உட்படுத்தப்படுவர்.

II. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் தொடர்பில் எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கும் உட்பட்டதுமாகும்.

III. இந்த நியமனமானது 03 ஆண்டுகள் தகுதிகூர் நிலைக்காலப் பகுதியைக் கொண்டதாகும். இலங்கை வெளிநாட்டுச் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் உத்தியோகத்தர் சேவைப்பிரமாணக் குறிப்பின் நியதிகளின் பிரகாரம் 1 ஆவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் 3 ஆண்டுகளுக்குள் சித்தியடையுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

IV. 01/2014 ஆம் இலக்கத்தைக் கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கை மற்றும் அதற்கான திருத்தங்கள் ஆகியவற்றின் நியதிகளின் பிரகாரம் அரசாங்க சேவைக்கு ஆட்சேர்க்கப்படும் உத்தியோகத்தர்கள் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் 5 ஆண்டுகளுக்குள் மற்றைய அரசகரும மொழிகளில் தேர்ச்சி பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். அரசகரும மொழிகள் தவிர்ந்த பிற மொழியொன்றின் மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளப்படும் உத்தியோ கத்தர்கள் தகுதிகூர் நிலைக்காலப்பகுதிக்குள் உத்தியோகபூர்வ மொழித்தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்து கொள்ளுதல் வேண்டும்.

V. இந்த நியமனமானது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க சேவை ஆணைக்குழுவினதும் தாபன விதிக்கோவையினதும் நடைமுறை விதிகளுக்கும் அரசாங்க நிதி ஒழுங்கு விதிகளுக்கும் பிற திணைக்களக் கட்டளைகளுக்கும் உட்படுத்தப்பட்டதாகும்.

VI. அரசாங்க சேவை ஆணைக்குழுவானது எந்த நபரும் வர்த்தமானி அறிவித்தலில் அல்லது இலங்கை வெளிநாட்டுச் சேவைப் பிரமாணக் குறிப்பில் விதித்துரைக்கப்பட்டுள்ள வேண்டப்படும் தகைமைகள் அல்லது நிபந்தனைகள் எதனையும் பூர்த்தி செய்யாமலிருக்கின்றமை அல்லது சமர்ப்பிக்கப்பட்ட விபரம் எதுவும் பிழையானது என்பது நிரூபிக்கப்படுமிடத்து பதவிக்கு அவர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் எந்த காலக்கட்டப் பகுதியிலும் அவரை பதவி நீக்கம் செய்யும் உரிமையைக் கொண்டுள்ளது.

*04.* **வயது எல்லை:**

பரீட்சார்த்தி ஒருவர் விண்ணப்பங்களின் முடிவுத் திகதியன்று 22 வயதை அடைந்தவராகவும் 30 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அதன்படி 1995.04.17 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ மற்றும் 1987.04.17 ஆம் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பிறந்தவர்கள் இதற்கமைய இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்).

ஏற்கனவே அரச சேவையில் பணியாற்றுபவராயின் அவர் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 35 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும், (அதன்படி 1982.04.17 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு பின்னரோ பிறந்தவர்கள் இதற்கமைய இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்) என்பதுடன் அவரது சேவைக்காலம் திருப்திகரமான பதிவுகளைக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.

**குறிப்புகள்:**

I. மேலே கூறப்பட்ட வாசகம் 4 இன் நோக்கத்திற்காக, ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவரென்பது (தாபன விதிக் கோவையின் அத்தியாயம் 1 இல் குறிப்பிடப்பட்டதன் படி), விண்ணப்ப முடிவுத் திகதியன்று மத்திய மாகாண அரசாங்க மற்றும் அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர் தனது சேவையில் உறுதிப்படுத்தப்பட்டவர் எனப் பொருள்படும்.

II. அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரரொருவர் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னுள்ள 05 வருட அரசாங்க சேவைக் காலப்பகுதியில் அவர் திருப்திகரமான சேவைப் பதிவுகள் உடையவராயின் அல்லது 05 வருட காலத்திற்குக் குறைந்த சேவைக் காலத்தை உடையவராயின் அவர் தனது முழு அரசாங்க சேவைக் காலத்திலும் திருப்திகரமான சேவைப்பதிவு அற்றவராயின் இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியற்றவராவர்.

III. அரசாங்க சேவையில் உள்ள ஒருவர் திருப்திகரமான சேவையை உடையவர் என்பதுவும் அவர் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முதல் முன்னுள்ள ஐந்து வருடக் காலப்பகுதிக்குரிய தனது சம்பள ஏற்றங்களை உரிய காலங்களில் தவறாது பெற்றுள்ளார் என்பதும் அல்லது ஒருவர் தான் சேவையாற்றிய தாபனங்களில் சேவையாற்றிய காலப்பகுதியானது ஐந்து வருட சேவைக் காலத்திற்குக் குறைவாயின் அம்முழுக் காலத்திற்கும் உரிய சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் அக் காலப்பகுதியில் குற்றங்கள் தண்டனை எதுவும் (எச்சரிக்கை தவிர) பெறாதவராகவும் இருத்தல் வேண்டும்.

IV. அரசாங்க சேவையில் உள்ளவர்கள் விண்ணப்பங்களை தங்கள் திணைக்களத்தின் / தாபனத்தின் தலைவர் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

*05.* **சம்பள அளவுத்திட்டம்:**

இச் சேவைக்கு 2016.02.25 ஆம் திகதியிடப்பட்டதும் 03/2016 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான பொது நிர்வாக சுற்றறிக்கையின் அட்டவணை I இன் பிரகாரமான சம்பள அளவுத்திட்டம் ஏற்புடைத்தானதாகும். ஏற்புடைத்தான சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு:

ரூபா 47,615 - 10 x 1,335 – 8 x 1,630 - 17 x 2,170 - 110,895 (SL 1 – 2016) (மாதாந்தம்)

எவ்வாறாயினும், மேற்குறித்த சுற்றறிக்கையின் அட்டவணை II இன் அடிப்படையில் சம்பளம் கொடுப்பனவு செய்யப்படும்.

*06.* **எழுத்துமூலப் பரீட்சை :**

I. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சார்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் இப்பரீட்சையானது 2017 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் கொழும்பில் நடாத்தப்படும்.

II. இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் மாத்திரம் நடாத்தப்படும்.

III. பரீட்சார்த்தி ஒருவர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று மொழிகளில் ஒரு மொழியில் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கலாம் என்பதுடன், அவர் சகல வினாத்தாள்களுக்கும் தாம் விண்ணப்பித்த மொழி மூலத்தில் மட்டுமே தோற்றுதல் வேண்டும். பரீட்சார்த்தி எந்த மொழி மூலத்தில் தோற்றுவதற்கு விண்ணப்பித்தாரோ அந்த மொழி மூலம் பின்னர் மாற்றப்பட மாட்டாது.

IV. எழுத்து மூலப் பரீட்சையானது பின்வரும் பாடங்களைக் கொண்டமைந்திருக்கும்.

| பாட இல. | பாடம் | கால அளவு | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்கு தேவைப்படும் ஆகக்குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01. | பொது வினாத்தாள் | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| 02. | உலக விவகாரங்கள் I | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| 03. | உலக விவகாரங்கள் II | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| 04. | கட்டுரை | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| 05. | சுருக்கி எழுதுதல் | 30 நிமிடங்கள் | 50 | 25 |

| *பாட இல.* | *பாடம்* | *கால அளவு* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடைவதற்கு தேவைப்படும் ஆகக்குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 06. | பல்விருப்பத் தேர்வு வினாத்தாள்<br>● விவேகப் பரீட்சை<br>● பொது அறிவும் நடைமுறை விவகாரங்களும் | 02 மணித்தியாலங்களும் 30 நிமிடங்களும் | 150 | 75 |
| 07. | மொழித்தேர்ச்சித் திறன் வினாத்தாள் | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |

V. எழுத்திலான பரீட்சையை நடாத்தும் அதிகாரபீடம் : பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்

VI. தொழில்சார் பரீட்சை: ஏற்புடைத்தாக மாட்டாது.

VII. தகவுத்திறன் மதிப்பீட்டிற்கான நேர்முகப் பரீட்சை: தகவுத்திறன் மதிப்பீட்டிற்கான நேர்முகப் பரீட்சையானது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட புள்ளியிடல் திட்டத்தின் பிரகாரம் நடாத்தப்படும்.

**குறிப்பு** :

(i) எழுத்து மூலப் பரீட்சையின் ஏழு (07) வினாத்தாள்களிலும் மொத்தமாக ஆகக் குறைந்தது 350 ற்கும் குறையாத புள்ளிகளையும் அத்துடன் ஒவ்வொரு வினாத்தாள்களுக்கும் ஆகக் குறைந்த வெட்டுப்புள்ளியையும் பெற்ற வேட்பாளர்கள் மட்டுமே தகவுத்திறன் மதிப்பீட்டிற்கான நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எனினும், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவுள்ள பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையானது நிரப்பப்படவுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைவிட ஐந்து மடங்குக்கு மேற்படலாகாது.

(ii) தகவுத்திறன் மதிப்பீட்டிற்கான நேர்முகப்பரீட்சையானது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைச் சபையொன்றினால் நடாத்தப்படும்.

(iii) எழுத்து மூலப் பரீட்சையில் பரீட்சார்த்திகளினால் பெறப்பட்ட புள்ளிகள் நேர்முகப்பரீட்சைச் சபைக்கு வழங்கப்படமாட்டாது.

(iv) தகுதி மதிப்பீட்டிற்காக எழுத்துமூலப் பரீட்சையிலும் நேர்முகப் பரீட்சையிலும் பெற்றுக் கொள்ளப்பட்ட முழுமொத்தப் புள்ளிகளின் மீது சிறப்புத் திறமை என்பது ஒழுங்கு வரிசைப்படுத்தப்படும். நியமனம் வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தும் சிறப்புத் திறமையின் அடிப்படையிலும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் செய்யப்படும்.

VIII. பொது நேர்முகப் பரீட்சை : புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

குறிக்கோள்கள் : இலங்கை வெளிநாட்டுச் சேவைப் பிரமாணக் குறிப்பிலும் மேற்போந்த பிரமாணக்குறிப்பின் பிரகாரம் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலிலும் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதையும் உடற் தகுதியை பரிசீலனை செய்வதையும் சரிபார்ப்பதன் பொருட்டு.

IX. விண்ணப்பங்கள் கோரும் முறை : அரசாங்க வர்த்தமானி, அரசாங்க அறிவித்தல்கள் மற்றும் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடுதல்.

X. எழுத்து மூலப் பரீட்சைக்கான பாடத்திட்டம் :

(அ) ***பொதுவினாத்தாள்*** - இவ் வினாத்தாள் இலங்கையின் தற்போதைய தேசிய மற்றும் சர்வதேச அரசியல், சமூக, கலாசார, பொருளாதாரச் சுற்றாடல், தேசிய மற்றும் சர்வதேச கரிசனைக்குரிய விடயங்கள், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திகள் தொடர்பிலும் பரீட்சார்த்தியின் அறிவைப் பரீட்சிப்பதாகும்.

(ஆ) ***உலக விவகாரங்கள் I*** - இவ்வினாத்தாள் சமாதானம், பாதுகாப்பு, அபிவிருத்தி ஆகியவற்றிற்கான உலகப் போக்குகளையும் இலங்கை மீது அவற்றின் தாக்கத்தையும் பரிசீலனை செய்வதற்கும் தற்போதைய உலக அரசியல் மாற்றங்கள், ஐக்கிய நாடுகள் சபையினதும் ஏனைய சர்வதேச அமைப்புகளின் மோதல்

நிலைமைகளையும் அபிவிருத்தியையும் பற்றிய விடயங்களையும் பரிசீலனை செய்வதற்கான பரீட்சார்த்தியின் திறனை ஆய்ந்தறிவதற்கான வினாக்களைக் கொண்டிருக்கும்.

(இ) ***உலக விவகாரங்கள்*** II - இந்த வினாத்தாள் சர்வதேச அமைப்புக்களினால் வகிக்கப்படும் வகிபாகத்தையும் உள்ளடக்கி வியாபாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் சமீபத்திய போக்குகள் மற்றும் சுற்றாடல், நிலைபெறத்தக்க அபிவிருத்தி மற்றும் இலங்கைக்கான அவற்றின் இயைபு போன்ற விடயங்கள் மற்றும் பிராந்திய பொருளாதார தொகுதிகளின் செல்வாக்கு ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கும்.

(ஈ) ***கட்டுரை*** - குறித்துரைக்கப்பட்ட ஒரு விடயம் பற்றி அல்லது கூடுதலான குறித்த விடயங்கள் பற்றிய கட்டுரைகளை எழுத வேண்டும். இவ்விடயங்கள் கற்கைத் துறையின் எந்த விடயமும் தொடர்பிலானவைகளாகவும் இருக்க மாட்டா. இது பரீட்சார்த்தியின் சிந்தனையின் கருத்தை வெளிப்படுத்துவதில் அவருடைய ஆற்றல்களைப் பரீட்சிப்பதற்கான விதத்தில் வடிவமைக்கப்படும். கட்டுரையானது விடயத்தைக் கையாளுவதில் மேற்கொள்ளப்படும் மொழிப்பாங்கு மற்றும் சமர்ப்பணம் ஆகியவற்றினால் கணிக்கப்படும். அது தெளிவாகவும் வாசிக்கத்தக்கதாகவும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**: பரீட்சார்த்திகளின் கவனம் இயைபு, தெளிவாக வாசிக்கப்படுதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்திற்கு ஈர்க்கப்படுகின்றது. பரிசீலித்து சிந்திக்கும் அளவிற்கும் எழுத்தின் தரத்திற்கும் தெளிவாகவும் சுருக்கமாகவும் ஒருவர் பாடவிடயத்தில் தம்மைப் பற்றி தெரிவிப்பதற்கான திறமை ஆகியவற்றின் பரிசீலனை பற்றி செலுத்தும் கவனத்துக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்.

(உ) ***சுருக்கியெழுதுதல்*** - கொடுக்கப்பட்ட பந்தியொன்றின் அர்த்தத்தை விளங்கிக் கொள்வதற்கான பரீட்சார்த்தியின் திறனை பரிசீலனை செய்வதற்காக இவ்வினாத்தாள் வடிவமைக்கப்படும்.

(ஊ) ***பல்விருப்பத்தேர்வு வினாத்தாள் (உளச்சார்பு பரீட்சையும் பொது அறிவும்)*** - இவ்வினாத்தாள் பின்வரும் பிரிவுகளைக் கொண்ட இரண்டு பாகங்களைக் கொண்டிருக்கும். இப்பிரிவு ஒவ்வொன்றும் பல்பக்க விருப்புரிமை வினாக்கள் 50 ஐக் கொண்டிருக்கும் என்பதுடன், இரு பிரிவுகளுக்கும் தலா 75 புள்ளிகள் வழங்கப்படும்:-

- *உளச்சார்பு பரீட்சை :* இது பரீட்சார்த்தியின் தர்க்கவியல் ரீதியான விவாதிக்கும் திறனையும், பரிசீலனை செய்யும் ஆற்றலையும் மதிப்பிடுவதற்கானது. (நேரம் : 75 நிமிடம்)

- *பொது அறிவும் தற்போதைய விவகாரங்களும் :* உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல், பொருளாதார மற்றும் சமூக கலாசார துறைகளில் நிலவுகின்ற தற்கால மாற்றங்கள் பற்றிய வேட்பாளரின் அறிவைப் பரிசோதித்தல் (நேரம் : 75 நிமிடம்)

(எ) ***மொழித்தேர்ச்சி*** - இந்த வினாத்தாள் பரீட்சார்த்தியின் மொழித்தேர்ச்சியை நிருணயிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் மூன்று வினாத்தாள்கள் உள்ளனவென்பதுடன் இந்த வினாத்தாளுக்கு குறித்தொதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகள் 100 ஆகும். இவ்வினாத்தாளின் காலப்பகுதி 03 மணித்தியாலங்களாகும்.)

இப்பரீட்சைக்கு சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் தோற்றும் பரீட்சார்த்திகள் ஆங்கில மொழியிலான ஒரு வினாத்தாளுக்கு தோற்றுதல் வேண்டுமென்பதுடன் ஆங்கில மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் ஒரு பாடத்திற்குத் தோற்றுதல் வேண்டும்.

07. **தகவுத்திறன் மதிப்பீட்டிற்கான நேர்முகப் பரீட்சை.-**

I. ஏழு (07) வினாத்தாள்களுக்கும் தோற்றி 350 புள்ளிகளுக்கும் குறையாதவைகளும் செயலாளரினால் தீர்மானிக்கப்படும் வெட்டுப் புள்ளியில் அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளியில் மொத்தப் புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எப்படியிருந்தபோதிலும் அழைக்கப்படவுள்ள பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை வெற்றிடங்களின் ஐந்து மடங்கு எண்ணிக்கையை விஞ்சுதலாகாது.

II. திறன் மதிப்பீட்டிற்கான நேர்முகப் பரீட்சை 100 புள்ளிகளைக் கொண்டிருக்கும்.

III. எச்சந்தர்ப்பத்திலும் ஆகக்குறைந்த வெட்டுப் புள்ளிகள் குறைக்கப்படமாட்டா.

IV. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையொன்றினால் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். இந்த நேர்முகப் பரீட்சையின் குறிக்கோள் யாதெனில் பரீட்சார்த்தி சேரவுள்ள சேவைக்கான அவருடைய தகுதியை மதிப்பிடுவதாகும். இச்சபை அவருடைய விவேகத்திற்கும் உளவிழிப்புணர்விற்கும்

விசேட முக்கியத்துவத்தை வழங்கும். இந்நேர்முகப் பரீட்சையில் பிற மொழிகளிலும் உயர்கல்வித் தகைமைகளிலும் கணினித் தேர்ச்சிகள் முதலியவற்றிலுமான பரீட்சார்த்தியொருவரின் திறமை நேர்முகப் பரீட்சையில் மதிப்பிடப்படும்.

V. எழுத்து மூலப் பரீட்சையில் பரீட்சார்த்திகளினால் பெறப்பட்ட புள்ளிகள் நேர்முகப்பரீட்சைச் சபைக்கு வழங்கப்பட மாட்டாது.

VI. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப்பரீட்சைச் சபையொன்றினால் பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

VII. தகவுத்திறன் மதிப்பீட்டிற்கான நேர்முகப் பரீட்சையின் புள்ளியிடல் திட்டமானது பின்வருமாறு:

| திறன் மதிப்பீட்டிற்கான நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படுவதற்கு கிடைக்கக் கூடியனவாகவுள்ள தலைப்புகள் | | ஒதுக்கீட்டுப் புள்ளிகள் | உச்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. | மேலதிக கல்வித்தகைமைகள் : | | 20 |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பட்டமொன்று: | | |
| | விசேட பட்டம் | | |
| | (i) 1 ஆவது வகுப்புடன் பெறப்பட்ட பட்டம் | 20 | |
| | (ii) 2 ஆவது வகுப்பு மேற்பிரிவுடன் பெற்ற பட்டம் | 18 | |
| | (iii) 2 ஆவது வகுப்பு கீழ்ப்பிரிவுடன் பெறப்பட்ட பட்டம் | 16 | |
| | பொது பட்டம் | | |
| | (i) 1 ஆவது வகுப்புடன் பெறப்பட்ட பட்டம் | 18 | |
| | (ii) 2 ஆவது வகுப்பு மேற்பிரிவுடன் பெற்ற பட்டம் | 16 | |
| | (iii) 2 ஆவது வகுப்பு கீழ்ப்பிரிவுடன் பெறப்பட்ட பட்டம் | 14 | |
| 02. | பிற தகைமைகள் : | | 15 |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பட்டமொன்று: | | |
| | (i) பட்டபின் படிப்பு பட்டம் | 15 | |
| | (ii) பட்டபின் படிப்பு டிப்புளோமா (ஓராண்டுக்கும் கூடுதலான காலப்பகுதி) | 13 | |
| | (iii) டிப்புளோமா பாடநெறி (06 மாதங்களுக்கும் மேற்பட்டது) | 10 | |
| | (iv) டிப்புளோமா/சான்றிதழ் பாடநெறி (03 மாதங்களுக்கு மேற்பட்டது) | 08 | |
| 03. | ஆங்கில மொழியில் தேர்ச்சி : | | 15 |
| | (i) ஆங்கில மொழியில் விசேட பட்டம் | 15 | |
| | (ii) பட்டப் படிப்பில் ஆங்கில மொழியை ஒரு பாடமாக எடுத்திருத்தல் வேண்டும். (பொதுக் கலைப்பட்டம்) | 08 | |
| | (iii) ஆங்கில மொழி மூலத்தில் பெற்ற பட்டம் | 07 | |
| | (iv) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது தொழில் நுட்பக் கல்லூரியிலிருந்து அல்லது அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் அல்லது (காலம் - 01 ஆண்டிற்கும் மேற்பட்ட காலம்) பதிவு செய்யப்பட்ட நிறுவகத்திலிருந்து பெறப்பட்ட டிப்புளோமா (ஓராண்டுக் காலத்திற்கும் மேற்பட்ட காலப்பகுதி) அல்லது TOEFL (TOEFL-iBT இல் 79 புள்ளிகள், TOEFL-CBT இல் 213 புள்ளிகள், TOEFL-PBT இல் 550 புள்ளிகள் அல்லது அதற்கு மேல்) அல்லது IELTS (6.0 புள்ளிகள் அல்லது அதற்கு மேல்) அல்லது இதைப் போன்ற தகைமை | 07 | |

| திறன் மதிப்பீட்டிற்கான நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படுவதற்கு கிடைக்கக் கூடியனவாகவுள்ள தலைப்புகள் | | ஒதுக்கீட்டுப் புள்ளிகள் | உச்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| | (V) க.பொ.த (உயர்தர) பரீட்சையில் (இலங்கை அல்லது இலண்டன்) ஆங்கிலம் ஒரு பாடமாக இருத்தல் | | |
| | விசேட சித்தி | 05 | |
| | அதிதிறமை சித்தி | 04 | |
| | திறமை சித்தி | 03 | |
| | சாதாரண சித்தி | 02 | |
| 04. | வெளிநாட்டு மொழியில் தேர்ச்சி : | | 10 |
| | க.பொ.த. (சா.த.) அல்லது அதற்கு மேற்பட்ட தரப் பரீட்சையில் அராபிய மொழி, சீன மொழி, பிரெஞ்சு மொழி, ஜேர்மன் மொழி, ஹிந்தி மொழி, இத்தாலிய மொழி, ஜப்பானிய மொழி, கொரியன் மொழி, ரஷ்ய மொழி அத்துடன் ஸ்பானிய மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல் | | |
| | i) பட்டப் படிப்பில் ஒரு பாடமாக எடுத்திருத்தல் | 10 | |
| | ii) க.பொ.த (உயர்தர) பரீட்சையில் ஒரு பாடமாக இருத்தல் | | |
| | விசேட சித்தி | 09 | |
| | அதிதிறமை சித்தி | 08 | |
| | திறமை சித்தி | 07 | |
| | சாதாரண சித்தி | 06 | |
| | iii) க.பொ.த (சா.த.) பரீட்சையில் ஒரு பாடமாக இருத்தல் | | |
| | விசேட சித்தி | 05 | |
| | அதிதிறமை சித்தி | 04 | |
| | திறமை சித்தி | 03 | |
| | சாதாரண சித்தி | 02 | |
| | iv) டிப்புளோமா பாடநெறி (06 மாதங்களுக்கும் மேற்பட்டது) | 05 | |
| | (V) சான்றிதழ் பாடநெறி (03 மாதங்களுக்கு மேற்பட்டது) | 03 | |
| 05. | கணினித் தேர்ச்சிகள் : | | 05 |
| | (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பட்டமொன்று | 05 | |
| | (ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது தொழில்நுட்பக் கல்லூரியிலிருந்து அல்லது பதிவு செய்யப்பட்ட அரசாங்க நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட டிப்புளோமா பட்டமொன்று (காலப்பகுதி: 01 ஆண்டிற்கும் மேற்பட்டது) | 03 | |
| | (iii) பதிவு செய்யப்பட்ட அரசாங்க நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட கல்விச் சான்றிதழ் (காலப்பகுதி 6 மாதங்களுக்கும் மேற்பட்டது / 720 மணித்தியாலங்களுக்கும் மேற்பட்டது) (தகவல் தொழில்நுட்ப பட்டம் என்பது அடிப்படைத் தகைமையாக இருக்குமிடத்து இந்த துறையின் கீழ் தகவல் தொழில்நுட்ப பட்டத்திற்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.) | 02 | |

| திறன் மதிப்பீட்டிற்கான நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படுவதற்கு கிடைக்கக் கூடியனவாகவுள்ள தலைப்புகள் | | ஒதுக்கீட்டுப் புள்ளிகள் | உச்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 06. | அரச கரும மொழிகளில் தேர்ச்சி : (பரீட்சைக்குத் தோற்றும் மொழி தவிர்ந்த) | | 10 |
| | i) க.பொ.த (உயர்தர) பரீட்சையில் முதல் மொழியாக சித்தியடைந்திருத்தல் | | |
| | விசேட சித்தி | 06 | |
| | அதிதிறமை சித்தி | 04 | |
| | திறமை சித்தி | 03 | |
| | சாதாரண சித்தி | 02 | |
| | ii) க.பொ.த (சா.த.) பரீட்சையில் இணைப்பு மொழியாக சித்தியடைந்திருத்தல் | | |
| | விசேட சித்தி | 04 | |
| | அதிதிறமை சித்தி | 03 | |
| | திறமை சித்தி | 02 | |
| | சாதாரண சித்தி | 01 | |
| 07. | ஆளுமை, தொடர்பாடல் திறன் மற்றும் விசேட உளச்சார்புகள் : | | 25 |
| | ஆளுமை | 10 | |
| | தொடர்பாடல் தேர்ச்சிகள் | 10 | |
| | விசேட தேர்ச்சிகள் | 05 | |
| | மொத்தம் | | 100 |

08. **விண்ணப்பம் செய்வதற்கான முறை :-**

I. விண்ணப்பப்படிவங்கள் முதலாம் பக்கத்தில் 01 இலிருந்து 06 வரையுள்ள விடயங்களையும் 2ஆம் 3ஆம் பக்கங்களில் ஏனைய விடயங்களையும் கொண்டனவாக இந்த அறிவித்தலுடன் பிரசுரிக்கப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் ஏ - 4 அளவுக் கடதாசியில் தயாரிக்கப்படல் வேண்டும். கடதாசியின் 2 பக்கங்களும் பயன்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் விண்ணப்பதாரரின் தெளிவான சொந்தக் கையெழுத்தில் நிரப்பப்படல் வேண்டும். சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் தயாரிக்கப்படும் விண்ணப்பத்தில் பரீட்சையின் பெயர் விண்ணப்பத்தின் தலைப்பில் ஆங்கிலத்திலும்கூட எழுதப்படல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் அமைவுறாதவைகளும் உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாதவைகளுமான விண்ணப்பங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தின் ஒளிப்படப் பிரதியொன்றை வைத்திருக்குமாறு விண்ணப்பதாரர்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது.

II. விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு கருதும் மொழி மூலத்திலேயே விண்ணப்பம் தயாரிக்கப்பட வேண்டும்.

III. விண்ணப்பங்களின் முடிவுறுத்தல் திகதி 2017 ஏப்ரல் 17 ஆந் திகதியாகும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம், "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ. இல. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு விண்ணப்பத்தின் முடிவடைதல் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். முடிவடைதல் திகதிக்குப் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பம் எதுவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பத்தைக் கொண்டிருக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை வெளிநாட்டுச் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட் சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2016 (2017)" என தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் (2X2 செ.மீ) கூடு ஒன்று தயாரிக்கப்பட்டு அதற்குள் ஆங்கில எழுத்து 'S' தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

IV. சகல விடயங்களிலும் பூர்த்தி செய்யப்படாத எந்த விண்ணப்பமும் நிராகரிக்கப்படுவதற்கு உட்படலாம். விண்ணப்பம் தபாலில் இழக்கப்பட்டது அல்லது தாமதிக்கப்பட்டது என விடுக்கப்படும் உரிமைக் கோரிக்கை எதுவும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

V. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. உரிய விண்ணப்பப்படிவத்தில் இப்பரீட்சைக்கு விண்ணப்பம் செய்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு விண்ணப்பங்களின் முடிவுத்திகதியன்று அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களை உரிய முறையில் பூர்த்தி செய்து அவற்றைப் பரீட்சைக் கட்டணத்தைக் கொடுப்பனவு செய்ததன் பேரில் பெற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுடன் பற்றுச் சீட்டுக்களையும் இணைத்து அனுப்பியுள்ள விண்ணப்பங்களுடன் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் விதித்துரைக்கப்பட்ட வயது எல்லையை விஞ்சாமலிருக்குமிடத்து அவர்களுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்படும். அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடன் உடனடியாக இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் பத்திரிகைகளில் அது பற்றிய விளம்பரமொன்று செய்யப்படும். தங்களுடைய அனுமதி அட்டைகளை பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்ட 02 அல்லது 03 நாட்களுக்குள் பெற்றுக் கொள்ளாத விண்ணப்பதாரர்கள் அதைப் பற்றி பரீட்சைகள் திணைக்களத்தின் அமைப்பு மற்றும் வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவிலிருந்து அது பற்றி விசாரணை செய்யலாம். விசாரணை செய்யும் போது விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டையின் இலக்கம் மற்றும் அஞ்சல் முகவரி ஆகியவற்றை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். வெளியூர் விண்ணப்பதாரரின் விடயத்தில் தமது அனுமதி அட்டையைப் பெற்றுக் கொள்ளக்கூடிய பெக்ஸ் இலக்கத்தைக் குறிப்பிட்டு அவர் அனுப்புதல் வேண்டும். உரிய காலத்தில் அனுமதி அட்டை கிடைக்காதவிடத்து விண்ணப்பதாரர்கள் அனுமதி அட்டைகளின் ஒளிப்படப் பிரதியொன்றை அனுப்புமாறு பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்குக் கோரிக்கை விடுக்கலாம். கோரிக்கைக் கடிதத்துடன் விண்ணப்பத்தின் பிரதியொன்றும் பரீட்சைக் கட்டணங்கள் கொடுப்பனவு செய்யப்பட்டமைக்கு வழங்கப்பட்ட பற்றுச்சீட்டின் ஒளிப்படப் பிரதியொன்றும் இணைக்கப்படல் வேண்டும். கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரர்கள் மேலே குறிப்பிடப்பட்ட முழு விபரங்களுடன் பெக்ஸ் (தொலைநகல்) மூலம் அனுமதி அட்டையின் பிரதி ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு கோரிக்கை விடுப்பது விவேகமானதாகும். பெக்ஸ் மூலம் அனுமதி அட்டையொன்றை பரீட்சைகள் ஆணையாளர் அனுப்புவதை இயலச் செய்வதன் பொருட்டு பெக்ஸ் இலக்கமொன்றைக் குறிப்பிட்டு அனுப்புதல் விவேகமானதாகும்.

VI. பரீட்சை அனுமதி அட்டையை விண்ணப்பதாரர் பெற்றுக் கொள்ளலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதாகவோ அவர் பதவிக்கு தகுதியுடையவர் என்பதாகவோ கருதப்படலாகாது.

09. **பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி**:

I. அனுமதி அட்டையிலும் விண்ணப்பத்திலும் விண்ணப்பதாரரினால் இடப்படும் கையொப்பம் அத்தாட்சிப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். நிறுவனமொன்றில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள விண்ணப்பதாரர் நிறுவனத்தின் தலைவரினாலும் அல்லது அந்த நிறுவனத்தின் தலைவரின் சார்பில் கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள பிற எந்த உத்தியோகத்தரினாலும் அத்தாட்சிப்படுத்துவித்தல் வேண்டும். அத்துடன் பிற விண்ணப்பதாரர்களின் விடயத்தில் அவர்கள் அரசாங்க பாடசாலையொன்றின் தலைவரினால் அல்லது இளைப்பாறிய தலைவரினால் அல்லது அப்பிரிவின் கிராம அலுவலரினால் அல்லது சத்தியப்பிரமாணம் முடித்த ஆணையாளரினால் அல்லது சட்டத்தரணியினால் அல்லது பிரசித்த நொத்தாரிசினால் அல்லது தரைப்படையின் அல்லது கடற்படையின் அல்லது விமானப்படையின் ஆணைபெற்ற உத்தியோகத்தரினால் அல்லது 240,360 ரூபாவைக் கொண்ட வருடாந்த சம்பளத்தைப் பெறும் நிரந்தர அரசாங்க அல்லது உள்ளூராட்சி உத்தியோகத்தரினால் விண்ணப்பத்தை அத்தாட்சிப் படுத்துவித்தல் வேண்டும். அத்துடன் புத்தவிகாரையின் பொறுப்புத் தலைவரினாலும் அல்லது எந்த மத குருவினாலும் புத்தவிகாரையின் பிரதான மதகுருவினாலும் அல்லது புகழ்பெற்ற மதத்தலைவரினாலும் அத்தாட்சிப்படுத்துவித்தல் வேண்டும். வேட்பாளர் ஒருவர் தமது அனுமதி அட்டையில் பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளரினால் அத்தாட்சிப்படுத்தப்படட தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வண்ணம் செய்யத் தவறும் விண்ணப்பதாரருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்கள் பரீட்சைக்குரிய விதிகள், மற்றும் ஒழுங்கு விதிகளுக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கும் உட்படுத்தப்படுவர். இச்சட்டங்களை மீறும் விண்ணப்பதாரர் ஒருவர் பரீட்சைகள் ஆணையாளரினால் தண்டப்பணமொன்று விதிக்கப்படுவதற்கு உட்படுத்தப்படுவர்.

II. விண்ணப்பதாரர் ஒருவர் தமக்குக் குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் பரீட்சைக்குத்தோற்றுவதற்கு முன்னர் பரீட்சையின் முதலாம் நாளில் மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். சகல விண்ணப்பதாரர்களினாலும் பின்பற்றப்பட வேண்டிய விதிகளின் தொகுதியொன்று இந்த வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

10. **பரீட்சைக்கான கட்டணங்கள்**:

பரீட்சைக்கான கட்டணம் 1,200 ரூபாவாகும். இக்கட்டணம் அஞ்சல்/ உப அஞ்சல் அலுவலகத்தில் முடிவுத்திகதிக்கு முன்செலுத்தப்பட்டு வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரரின் பெயரின் கீழ் கொடுப்பனவு செய்யப்படுவதன் மீது வழங்கப்படும் பற்றுச்சீட்டு விண்ணப்பத்தின் இயைபுள்ள இடத்தில் ஒட்டப்படல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை வைத்திருத்தல் வேண்டும். காசுக்கட்டளைகள் அல்லது முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா என்பது கவனத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

**குறிப்பு**.- பரீட்சையிலிருந்து எக்காரணத்தின் பொருட்டும் விலகும் அல்லது பரீட்சைக்குத் தோற்றியதன் பின்னர் தகுதியற்றவர் எனக் காணப்படும் உத்தியோகத்தரொருவர் பரீட்சைக் கட்டணத்தின் முழுத் தொகையையும் அல்லது பகுதித் தொகையையும் மீளப்பெறுவதற்கோ அல்லது பிறிதொரு பரீட்சைக்குத் தோற்றுவதற்கோ உரித்துடையவராகமாட்டார்.

11. **விண்ணப்பதாரர்களின் அடையாளத்தை நிரூபித்தல்:**

விண்ணப்பதாரர் ஒருவர் பரீட்சைக்குத் தோற்றுகின்ற பாடம் ஒவ்வொன்றின்போதும் தமது அடையாளத்தை பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் நிரூபிக்குமாறு வேண்டப்படுவார். இந்நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்களில் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i). ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை

(ii). செல்லுபடியாகு நிலையிலுள்ள கடவுச்சீட்டு

12. **பெறுபேறுகளின் வெளியீடு:**

இந்த அறிவித்தலின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் உச்சத் தகைமைகளைப் பெறும் விண்ணப்பதாரர்கள் தகுதி மதிப்பீட்டுப் பரீட்சையொன்றுக்குத் தோற்றுதல் வேண்டுமென்பதுடன் இந்த இரண்டு பரீட்சைகளிலும் அவர்கள் பெற்றுக் கொண்ட மொத்தப் புள்ளிகளின் அடிப்படைமீது பெறுபேற்று பத்திரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பப்படும். அதன் பின்னர் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பின் பிரகாரம் பரீட்சைப் பெறுபேறுகள் சகல விண்ணப்பதாரர்களுக்கும் நேரடியாக அறிவிக்கப்படும் அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

13. **பொய்யான தகவல்களை வழங்குதல்:**

விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பிழையானவை என அல்லது பொய்யானவை என ஆட்சேர்ப்புக்கு முன்னர் காணப்படுமிடத்து அவருடைய பரீட்சார்த்த நிலை இரத்துச் செய்யப்படும். அத்தகைய பொய்யான அல்லது பிழையான விபரங்கள் ஆட்சேர்ப்புக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து அவர் சேவையிலிருந்து சேவை நீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவார்.

14. இந்த வர்த்தமானி அறிவித்தலில் தரப்படாத எந்த விடயமும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் கையாளப்படும். அரசாங்க சேவை ஆணைக்குழுவானது வெற்றிடங்களை முழுமையாக நிரப்புவதற்கு அல்லது பகுதியளவில் நிரப்புவதற்கு அல்லது நிரப்பாமல் விடுவதற்கான உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.

15. பொருள் கோடல் தொடர்பில் ஏதாவது முரண்பாடு இருக்குமிடத்து சிங்கள மொழியிலான வாசகம் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எசல வீரக்கோன்,
செயலாளர்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு,
குடியரசு கட்டடம்,
கொழும்பு – 01.
2017, மார்ச்சு 03.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**அரசாங்க சேவை ஆணைக்குழு**

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு

**இலங்கை வெளிநாட்டுச் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016 (2017)**

Open Competitive Examination for Recruitment to Grade III of the Sri Lanka Foreign Service - 2016 (2017)

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

பரீட்சை எழுதும் மொழி மூலம்
(தயவு செய்து கூட்டினுள் உரிய இலக்கத்தை எழுதுக)

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

01. (i) (அ) முதலெழுத்துக்களை இறுதியில் இட்டு கடைசிப் பெயர் (ஆங்கிலத்தில் தனிப் பேரெழுத்துக்களில்): ..........................................................................................
(உதாரணம் : SUMANASIRI, E.D.C.B.A)

(ஆ) முதலெழுத்துக்களை இறுதியில் இட்டு கடைசிப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) .........
..........................................................................................................

(ii) (அ) முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர்கள் (ஆங்கிலத்தில் தனிப் பேரெழுத்துக்களில்) ........................................................................................

(ஆ) முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர்கள் (சிங்களத்தில்/தமிழில்):
..........................................................................................................

02. முகவரி:
(i) வதிவிடம் (ஆங்கில தனிப் பேரெழுத்துக்களில்) .......................................................
..........................................................................................................
(அனுமதி அட்டைகள் இந்த முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.)

(ii) உத்தியோகபூர்வ :...............
(iii) தொலைபேசி இலக்கங்கள்: உத்தியோகபூர்வ: ...........................

வதிவிடம்: ....................................

03. பால்:
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதுக.)
ஆண் - 0
பெண் - 1 ☐

04. தேசிய அடையாள அட்டை இல: ☐☐☐☐☐☐☐☐☐☐

05. வர்த்தமானி அறிவித்தலின் 06. X (எ) இன் பிரகாரம் "மொழித் தேர்ச்சி" பாடத்திற்காக விண்ணப்பித்த மொழிகள் :
( சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4 ) கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதுக. ☐

06. (i) பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

(ii) விண்ணப்ப முடிவுத் திகதியில் வயது:

வருடங்கள் : ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் : ☐☐

07. தேசிய இனம்: ☐
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதுக.)
(சிங்களம் - 1, தமிழ் - 2, இந்தியத் தமிழ் - 3, முஸ்லிம் - 4, ஏனையோர் - 5)

08. சிவில் நிலை : ☐
(கூட்டினுள் உரிய இலக்கத்தை எழுதுக)
விவாகமாகாதவர் - 1
விவாகமானவர் - 2

09. இலங்கை வெளிநாட்டுச் சேவை நியமனத்திற்காக நீங்கள் அப்பரீட்சைக்கு முன்னர் தோற்றியிருந்தால் அப் பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டை / ஆண்டுகளைக் குறிப்பிடுக:
(அ) ..................................................
(ஆ) ..................................................
(இ) ..................................................

10. நீங்கள் அரசாங்க சேவையில் பதவியொன்றை வகித்துக் கொண்டிருக்கும் பட்டதாரியாகவிருக்குமிடத்து அப்பதவியின் பெயரைக் குறிப்பிடுக: ....................................

11. பல்கலைக்கழக பட்டத்தின் விபரங்களும் அது வழங்கப்பட்ட திகதியும் இத்தொடர்பில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நீங்கள் தகைமையுடையவரா என்பது பற்றி அறிந்து கொள்வதற்காக இந்த அறிவித்தலின் 2(1) பந்தியை வாசிக்கவும்.:

(i) பல்கலைக்கழகத்தின் நிறுவனத்தின் பெயர்:......
(ii) பட்டம்:...........................................................................................
(iii) பட்டம் பெற்ற திகதி : ...........................................................................
(iv) பொது/சிறப்பு : ...........................................................................
(v) பாடங்கள் : ...........................................................................
(vi) வகுப்பு : ...........................................................................

12. உங்களுக்கு வேறு ஏதாவது கல்வி / தொழில்சார் தகைமைகள் இருக்குமிடத்து (பட்டப் பின்படிப்புப் பட்டம் /டிப்ளோமா / வெளிநாட்டு மொழிகளில் வினைத்திறமை முதலியன) கீழே தகவல்களை தரவும். .............................................
...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................

13. நீங்கள் பரீட்சைக்கான கட்டணங்களைச் செலுத்தி பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு சம்பந்தமான விபரங்கள்:

I) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட தபால் அலுவலகம் : ..................................
II) பற்றுச்சீட்டின் இலக்கமும் திகதியும் : ........................................................
III) செலுத்தப்பட்ட பணத்தொகை : ...............................................................

பணம் செலுத்திய பற்றுச் சீட்டை இங்கு ஒட்டவும்.
(இப்பற்றுச்சீட்டின் ஒளிப்படப்பிரதியொன்றை வைத்திருக்கவும்.)

14. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

மேலே தரப்பட்ட தகவல்கள் சரியானதும் உண்மையானதும் என்றும், என்னால் தரப்பட்ட தகவல்கள் பிழையானவை அல்லது பொய்யானவை எனக் கண்டறியும் பட்சத்தில், இப்பரீட்சை பற்றிய பிரமாணத்தின்படி நான் தகைமையற்றவர் எனத் தெரியவந்தால் பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின்போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்நிலையிலும் எனது பரீட்சார்த்தி உரிமையை இரத்துச் செய்வதற்காக எடுக்கப்படும் எத்தகையதுமான எத்தீர்மானத்திற்கும் நான் உடன்படுகின்றேன் என்றும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன். மேலும், பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்கள் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் கட்டுப்படுவதற்கும் நான் இணங்குகின்றேன்.

..........................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

15. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

எனது அலுவலகத்தின் அலுவலர் திரு./திருமதி/செல்வி ............................................................ என்பவரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும் என்றும் ................................. ஆந் திகதி என்முன்னிலையில் இதில் கையொப்பம் இட்டார் என்றும் சான்றுப்படுத்துகிறேன்.

........................
சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்.
உத்தியோகபூர்வ முத்திரை :

பெயர்:- ................................
பதவிப் பெயர்: ...........................
முகவரி : ................................
திகதி: .....................................
(தயவு செய்து உத்தியோகபூர்வ முத்திரையினால் உறுதிப்படுத்தவும்)

16. திணைக்களத் தலைவரின் /நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :

(ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ள / மாகாண அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்)
திரு./திருமதி/செல்வி....................................... ஐந்து ஆண்டுகளில் ....................... ஆண்டுகளில் தமது (அ) சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றுள்ளார் என்பதையும் (ஆ) அவர் (எச்சரிக்கை நீங்கலாக) எந்தவிதமான ஒழுக்காற்று தண்டனைகளுக்கும் உட்படுத்தப்படவில்லையெனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

இந்த விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள விவரங்கள் சரியானவைகளெனவும்/ இவர் இயைபுள்ள பரீட்சைக் கட்டணங்களையும் செலுத்தியுள்ளாரெனவும் இத்துடன், காசுப்பற்றுச்சீட்டை இணைத்துள்ளார் எனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

இந்த உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படுமிடத்து அவருடைய தற்போதைய பதவியிலிருந்து அவரை உடனடியாக விடுவிக்க முடியும்.

…….……………………………………….
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்,
பதவிப் பெயரும்.

திகதி: …………..

3-893